இருக்கக்கூடிய இடங்களிலே அந்த சிறிய விமானங்களை இயக்கும் அந்தத் திட்டத்தின்கீழ் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மத்திய அரசின் UDAN திட்டத்தின்கீழ் இயங்கக்கூடிய ATR flight–ல் இருக்கக்கூடிய மொத்த இருக்கைகளிலே 50 சதவிகித இருக்கைகள் ரூ.2,500/–க்குக்கீழ் இருக்க வேண்டும் என்று விதிமுறையில் இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே அந்தக் கோரிக்கையை எடுத்துச் சொல்லி இன்னும் அதிக இடங்களிலே விமான நிலையங்களை அமைப்பதற்குண்டான நடவடிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 179, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

179—

தரம் உயர்த்துதல்

***2714—திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவுண்டம்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம், 24. வீரபாண்டி ஆனைக்கட்டியிலுள்ள பழங்குடியினர் உண்டி, உறைவிட உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11–05

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கல்வித் துறையில் அம்மா தந்த சீதனம். இதுவரை யாரும் செய்யாத நூதனம். ஏழைகளின் இதயக்

கனி எம்.ஜி.ஆர்., பிள்ளைகளின் இதயக் கனினி கலைமகளின் மறுவடிவம் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் திருவடியை வணங்குகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களையும் வணங்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கோயம்புத்தூர் மாவட்டம், கவுண்டம்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம், 24. வீரபாண்டி அரசு உண்டி, உறைவிட உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்த உறுப்பினரின் கோரிக்கை தேவையின் அடிப்படையிலும், அரசின் நிதி நிலைமைக்கேற்பவும் பரிசீலிக்கப்பபடும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.

திரு. வி.சி. ஆறுக்குட்டி: மண்ணை விட்டு மறைந்தாலும், மக்கள் மனதிலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயிலும் திசை நோக்கி வணங்கி . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுக்குட்டி, எல்லோருக்கும் ஆட்டுக்குட்டி கொடுத்துவிட்டீர்களா?

திரு. வி.சி. ஆறுக்குட்டி: ஆட்டுக்குட்டி கொடுத்தாகிவிட்டது. அதனால்தான் இரண்டாவது முறையாக உறுப்பினராக வந்திருக்கிறேன். எனது கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட சின்னதடாகம் ஊராட்சியிலே புதிதாகக் காவல் நிலையம் அமைப்பதற்கு ரூ.2 கோடி நிதி ஒதுக்கித் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், எனது தொகுதிக்குட்பட்ட ஆனைக்கட்டி பகுதியில் மின்சார வசதியே இல்லாத ஊர் இருந்தது. அந்த நிலையை மாற்றி, தூமனூர்–சேம்புக்கரை பகுதி மலைவாழ் மக்களின் நலனைக் கருதி, மின்சார வசதி ஏற்படுத்தித் தந்த மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத்

தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், எனது தொகுதிக்குட்பட்ட கவுண்டம்பாளையம் பகுதியிலே புதிதாக வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்காக 3.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கித் தந்த மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட ஆனைக்கட்டி பகுதியிலே மலைவாழ் மாணவச் செல்வங்கள், மேல்நிலைப் பள்ளியில் படிப்பவர்கள் என்றால் சின்னதடாகம் வந்துதான் படிக்க வேண்டுமென்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்த காலத்திலேயே இந்தக் கேள்வியை நான் தொடுத்திருந்தேன். இந்த ஆண்டாவது ஆனைக்கட்டி மலைவாழ் மாணவச் செல்வங்களுடைய நலனைக் கருதி, மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், திரு. ஆறுக்குட்டிக்கு நல்ல பதிலாகச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'கல்வியில் சிறந்த தமிழ்நாடு, புகழ் கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்றார் அன்று பாரதியார். இன்றோ, 'கணினியில் சிறந்த தமிழ்நாடு, கல்வியில் வளர்வது தமிழ்நாடு; இது அம்மா கண்ட தமிழ்நாடு' என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் 1,134 ஆதி திராவிட நலப் பள்ளிகளும் மற்றும் 314 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம், ஆனைக்கட்டி, உண்டி உறைவிடப் பள்ளியில் தற்போது 285 மாணாக்கர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இப்பகுதியில் வசித்து வரும் மொத்த மக்கள்தொகையின் எண்ணிக்கை சுமார் 2,500. இவர்களில் 1,050 பேர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சேர்ந்த மக்களாவார்கள். ஆனைக்கட்டி உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியிலிருந்து 16 கிலோ மீட்டர் தொலைவில் சின்னதடாகத்தில் அரசு மேல்நிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஒரு குறிப்பிட்ட பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியரின் எண்ணிக்கை அப்பள்ளியின் இடவசதி மற்றும் இதர வசதிகள், அந்தப் பள்ளி அமைந்திருக்கும் பகுதியில் வாழும் ஆதி திராவிடர் அல்லது பழங்குடியின மக்களின் எண்ணிக்கையை அளவீடுகளாகக் கொண்டு, பள்ளிகளை அதன் அடுத்த நிலைக்கு, அதாவது துவக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும். அந்தவகையில் உரிய ஆய்வு மேற்கொண்டு மாண்புமிகு முதல்வரின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, தேவையின் அடிப்படையில் உறுப்பினரின் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுக்குட்டி அவர்கள்.*

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைச் சொல்லி அமருகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 180, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

180—

புதிய தேர்

***5637—திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை அருள்மிகு அழகிய ராஜமன்னார் இராஜகோபால சுவாமி திருக்கோயிலுக்குப் புதிய தேர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?